# பொருள் 3: இறையரசின் போதனை மூலம் நல்வாழ்வு

## 13 மங்களப் போதனை

கடற்கரை தெரு,
கலிலேயா.

என் அன்பு நண்பன் எலியேசருக்கு!


சாலோம்!

உமது கடிதம் கிடைக்கப்பெற்றேன். நீர் மிகக் கவலையுடன் அடிப்படைத்தேவைகள், பூர்த்தி செய்யப்படாத நிலையிலுள்ள ஏழைகளைப் பற்றியும், சுயநல நோக்குடன் செல்வத்தை தம்வசம் குவித்து வைத்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியும் எழுதியிருந்தீர்.

நண்பா! அன்று இயேசுவின் சமவெளிப் பொழிவைக் கேட்க சென்றிருந்தேன். வறுமை நிலையிலிருப்போரும், சமூகத்தில் ஒதுக்கி வைக்கப்பட்டவர்களும், துன்பத்திலிருப்போருமான ஏராளமான மக்கள் அங்கு ஒன்று சேர்ந்திருந்தார்கள். இயேசுவின் ஆறுதல் தரும் சமவெளிப் பொழிவு அவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. ஏழைகளின் நிர்க்கதியான நிலையைக் கருத்தில் கொள்ளாது சுகபோக வாழ்க்கை வாழும் செல்வந்தருக்கு இப்போதனைகள் எச்சரிக்கையாகவும் அமைந்தது.

இயேசு ஆணித்தரமாக கடவுளின் ஆட்சியின் வாரிசுகள் ஏழைகளே என்றும், செல்வந்தர் ஆட்சிக்கு செல்வது கடினம் என்றும் கூறினார், ஆனாலும் இயேசு செல்வந்தரிலும், கரிசனையாயிருப்பதை அவர் கூறிய கதையினூடாக நான் அறிந்துகொண்டேன். செல்வந்தரும், தம் செல்வத்தை ஏழைகளின் நல்வாழ்வுக்காக செலவு செய்து, இறையாட்சிக்கு உரித்துடையவர்களாகக் கூடும் என்பதை விளக்கினார்.

இயேசுவின் இவ்வார்த்தைகள் உமக்கும் தைரியமளிக்கும் என விசுவாசித்து இவற்றை உமக்கு எழுதுகிறேன். நாமும் ஏழைகள் நல்வாழ்வு பெறுவர் எனும் நம்பிக்கையில் வாழ்வோம். அதற்காக நாமும் சேர்ந்து உழைப்போம்.



கடவுள் உம்மை ஆசீர்வதிப்பாராக!

இப்படிக்கு உமது நண்பன், லாபான்.

இலவச விநியோகத்திற்காக

# சமவெளிப் பொழிவு

## வாசிப்போம்

**லூக்கா 6:20–26**

“ஏழைகளே, நீங்கள் பேறு பெற்றோர்; ஏனெனில் இறையாட்சி உங்களுக்கு உரியதே.”

செல்வர்களே ஐயோ! உங்களுக்குக் கேடு; ஏனெனில் நீங்கள் எல்லாம் அனுபவித்து விட்டீர்கள்”

“இப்பொழுது, பட்டினியாய் இருப்போரே நீங்கள் பேறு பெற்றோர்; ஏனெனில் நீங்கள் நிறைவு பெறுவீர்கள்.”

இப்பொழுது, உண்டு கொழுத்திருப்போரே ஐயோ! உங்களுக்குக் கேடு; ஏனெனில் பட்டினி கிடப்பீர்கள்.

“இப்பொழுது, அழுது கொண்டிருப்போரே, நீங்கள் பேறு பெற்றோர்; ஏனெனில் நீங்கள் சிரித்து மகிழ்வீர்கள்.”

“இப்பொழுது சிரித்து இன்புறுவோரே ஐயோ! உங்களுக்குக் கேடு; ஏனெனில் துயருற்று அழுவீர்கள்.

“மானிட மகன் பொருட்டு மக்கள் உங்களை வெறுத்து, ஒதுக்கி வைத்து. நீங்கள் பொல்லாதவர் என்று இகழ்ந்து தள்ளி விடப்படும்போது நீங்கள் பேறு பெற்றோர்;”

மக்கள் எல்லாரும் உங்களைப் புகழ்ந்து பேசும் போது ஐயோ! உங்களுக்குக் கேடு; ஏனெனில் அவர்கள் மூதாதையாரும் போலி இறைவாக்கினருக்கு, இவ்வாறே செய்தார்கள்.”



## செல்வரும் இலாசரும் கதையை திருவிவிலியத்திலிருந்து வாசிப்போம்

**லூக்கா 16: 19−26**



செல்வர் ஒருவர் இருந்தார். அவர் விலையுயர்ந்த மெல்லிய செந்நிற ஆடை அணிந்து நாள் தோறும் விருந்துண்டு இன்புற்றிருந்தார்.
லூக்கா 16 : 19

இலாசர் என்னும் பெயர் கொண்ட ஏழை ஒருவரும் இருந்தார். அவர் உடல் முழுவதும் புண்ணாய் இருந்தது. அவர் அச் செல்வருடைய வீட்டு வாயில் அருகே இருந்தார்.
லூக்கா 16:20

அந்த ஏழை இறந்தார். வானதுாதர்கள் அவரை ஆபிரகாமின் மடியில் கொண்டு போய் சேர்த்தார்கள். லூக்கா 16:22

செல்வந்தரும் இறந்தார். அவர் அடக்கம் செய்யப்பட்டார். அவர் பாதாளத்தில் வதைக்கப்பட்டபோது, அண்ணாந்து பார்த்து, தொலைவில் ஆபிரகாமையும் அவர் மடியில் இலாசரையும் கண்டார். லூக்கா 16:22−23

அவர் "தந்தை ஆபிரகாமே எனக்கு இரங்கும். இலாசர் தமது விரல் நுனியைத் தண்ணீரில் நனைத்து எனது நாவைக் குளிரச் செய்ய அவரை அனுப்பும், ஏனெனில் இத்தீப்பிழம்பில் நான் மிகுந்த வேதனைப்படுகிறேன்." என்றான்.
லூக்கா 16 : 24

அதற்கு ஆபிரகாம் "மகனே! நீ உன் வாழ்நாளில் நலன்களையே பெற்றாய். அதே வேளையில் இலாசர் இன்னல்களையே அடைந்தார். அதை நினைத்துக்கொள்." "இப்பொழுது,இலாசர் இங்கே ஆறுதல் பெறுகிறார். நீயோ மிகுந்தவேதனைப்படுகிறாய்."
லூக்கா 16:25

`அன்றியும், எங்களுக்கும். உங்களுக்கும் இடையே பெரும் பிளவு உள்ளது. ஆகையால் இங்கிருந்து ஒருவர் உங்களிடம் வர விரும்பினாலும் கடந்து வர இயலாது. அங்கிருந்து நீங்கள் எங்களிடம் கடந்து வரவும் இயலாது`
லூக்கா 16:26

இலாசர் என்றால் கடவுள் உதவுவார் எனப்பொருள்படும். இன்று இலாசர் என்னும் பாத்திரப்படைப்பு மூன்றாம் உலகில் வறுமை கோட்டின் கீழ் வாழ்பவரைக் குறிக்கும்.

## கதையிலிருந்து கற்றுக்கொள்பவை

இலாசர் உணவு– உறைவிடம்– உடை இன்றி, செல்வர் வாசலில் இருந்தார். லூக்கா *16:20*

ஏழைகள் – அடிப்படைத் தேவைகள் உரிய முறையில் பூர்த்திசெய்ய முடியாத நிலையில் வாழ்பவர்.

செல்வர் இலாசருவின் சுக துக்கத்தை கவனிக்கவில்லை லூக்கா 16:19

அநேகமான செல்வர் தம்மிடம் உள்ள வளங்களை பகிர்ந்து கொடுக்காமல் சுயநலமாக வாழ முயல்வதுண்டு.

செல்வர் நாள் தோறும் விருந்துண்டு இன்புற்று இருந்தார்.

ஏழைகள் பட்டினியால் வாடும்போது செல்வர் விருந்துண்டு களிப்புடன் வாழ்தல் தவறானது.

செல்வர் பாதாளத்தில் வாதிக்கப்பட்டார்.
செல்வர் விண்ணரசில் புகுவது கடினம். மத்தேயு *19:22–23*

செல்வர் தம்மிடம் இருப்பதை ஏழைகளோடு பகிர்ந்து, ஏழை – செல்வர் எனும் நிலையை அகற்றுவதால் விண்ணரசுக்கு தகுதி பெறுவதோடு இவ்வுலகையே இறையரசு போல மாற்றலாம்.

## சிந்திப்போம்

- இறைசாயலில் படைக்கப்பட்ட மனிதர் ஏழை – செல்வர் என்ற பாகுபாட்டை நீக்கி சமத்துவ நிலை உருவாக்க பாடுபடல் வேண்டும்.
- சுய நல வாழ்க்கை வாழும் செல்வர், தங்கள் வசம் வளங்களை குவித்து வைப்பதால் ஏழைகள் துன்பப்படுகின்றனர்.
- ஏழைகள் கடவுள் ஆட்சியின் வாரிசுகள். செல்வர், தம் வளங்களை ஏழைகளுடன் பகிர்வதன் மூலம் தம்மை கடவுளின் ஆட்சிக்கு ஏற்றவர்களாக்கலாம்.
- நாம் தியாக உணர்வுடன் நம் சொந்த தேவைகளுக்கு முன்னுரிமை வழங்காது, பிறர் தேவைகளை சந்திப்பதில் முனைப்பு வேண்டும்.

மாணவர்களே! நாமும் ஏழைகளுக்குப் பகிர்ந்து அளிப்போம். கண்ணீர் துடைப்போம். இறையரசின் குடிமக்களாவோம்.

**செயற்பாடு**

1. பின்வரும் திருமறைப்பகுதியை வாசித்து அட்டவணையை பூர்த்தி செய்க.

| திருமறைப்பகுதி | செயல்பாடு | பெறுபேறுகள் |
|---|---|---|
| மத்தேயு 19:21 | உம் உடமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்போது | |
| லூக்கா 6:20 | ஏழைகளே நீங்கள் பேறு பெற்றோர் ஏனெனில் | |
| லூக்கா 16:25 | இலாசர் இன்னல்களை அடைந்தார். இப்போது | |
| லூக்கா 19:10 | இழந்து போனதை தேடி மீட்டிடவே | |

2. சக மாணவரோடு சேர்ந்து, நீங்கள் வாழும் தொகுதியில் உள்ள வறுமை குடும்ப சிறுவரின் போசாக்கு மட்டத்தை உயர்த்த மேற்கொள்ளக்கூடிய திட்டத்தை வகுக்க.

3. இலாசர் – செல்வர் கதையை ஓர் வில்லுபாட்டு வடிவிலமைத்து, உமது நண்பருடன் வகுப்பில் மேடையேற்றுக.